# தாயின் மணிக்கொடி



பூவை.எஸ்.ஆறுமுகம்

செல்வி பதிப்பகம்

சிறுவர் நாவல்

# தாயின் மணிக்கொடி

## செல்வி பதிப்பகத்தாரின்

### சிறுவர் நூல்கள்

✸

| | | |
|---|---|---|
| வேள்பாரி | 0 | 50 |
| நட்சத்திரக் குழந்தை | 1 | 00 |
| சூரப்புலி | 1 | 00 |
| தொண்டைமான் இளந்திரையன் | 1 | 00 |
| தாயின் மணிக்கொடி | 1 | 25 |
| காஞ்சிக் காவலர் கதை | 1 | 50 |
| குழந்தைப் பாடல்கள் | 1 | 50 |
| நகைச்சுவை நீதிக்கதைகள் | 2 | 00 |
| தமிழகப் பழமொழிகள் | 2 | 00 |
| திசை மாற்றம் | 2 | 00 |
| விடுகதைக் களஞ்சியம் | 2 | 50 |
| ஊமை ராஜா | 3 | 00 |




**பூவை எஸ். ஆறுமுகம்**

செல்வி பதிப்பகம்

காரைக்குடி

செல்வி - 57
முதற்பதிப்பு - மே 1966
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

O 31 : 3
K 6

விலை ரூ. 1-25

# THAYIN MANIKKODI

CHILDREN'S NOVEL

Author : Poovai S. Arumugam

Edition : First Edition
May, 1966

Publisher : Selvi Pathippaham,
Karaikudi-1

Printers : South India Press,
Krishna Press,
Karaikudi.

Price : Re. 1-25

**இந்த நாவல்**

தாய்த் திருநாட்டைக் காக்கும் தன்மானத்தையும் வீரத்தையும் விளக்கிச் செல்கிறது.


வள்ளுவர் அறத்தின் வழிநின்று அரசியல் காக்கும் அழகான கதைப் போக்கை மாணவ மாணவிகள் ஒருவர்பின் ஒருவராகச் சொல்லும் திறன் நம்மை மகிழச் செய்கிறது.

கதையைப் படித்தோமா, காட்சியில் திளைத்தோமா என்றே நமக்குப் புரியவில்லை. நீங்களும் படியுங்கள்; படித்தபின் சொல்லுங்கள்!

"பூவை, எஸ். ஆறுமுகம் அவர்கள் மிக நன்றாக எழுதியிருக்கிறார் இந்த அருமையான கதையை" என்றுதான் நீங்களும் சொல்லப் போகிறீர்கள்.

**இந்நூலிற்கு அணிகலன் 'கனம் முதலமைச்சர் உயர்திரு. பக்தவத்சலம் அவர்களின்' அணிந்துரையாகும். அவர்களுக்கு எங்கள் உள்ளம் நிறைந்த நன்றி என்றும் உரியதாகும்.**

இந்நூலை எங்கள் வெளியீடாக வெளியிடுவதில் மிக மகிழ்ச்சியடைகிறோம்.



தாய்த் திருநாட்டைக் காக்கும் பணியில் நாம் ஒவ்வொருவரும் எப்பொழுதும் முன்நின்று வெற்றி முரசம் கொட்டுவோம்!

**வீர. சிவராமன்**

## நீங்கள் படிக்கும் பொழுது உங்கள் உள்ளத்தைத் தொடும் அறநெறிகள்

- கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
  நாடென்ப நாட்டில் தலை.

- பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையாள்
  தகைமைக்கண் தங்கிற்று உலகு

- ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
  சூழினுந் தான்முந் துறும்

- அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
  என்புதோல் போர்த்த உடம்பு

- பொய்யாமை, பொய்யாமை ஆற்றின் அறம்பிற
  செய்யாமை செய்யாமை நன்று

- தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
  சொற்காத்துச் சோர்விலாள் பெண்

- அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
  மானம் உடைய தரசு

- குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
  குன்றி அனைய செயின்.

கனம் முதலமைச்சர்

## உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் அணிந்துரை

நாட்டின் எதிர்காலம் இன்றையக் குழந்தைகளின் கையில் உள்ளது. அவர்கள் தியாக உணர்வு, தேசபக்தி, ஒற்றுமை ஆகிய நற் பண்புகளோடு வளர்ந்தால்தான், நாட்டின் எதிர்கால வாழ்வுக்கு உத்தரவாதம் சொல்ல முடியும். அவர்களை அவ்வாறு வளர்ப்பது இன்றையத் தலை முறையைச் சேர்ந்த பெரியோர்களின் கடமை.

சிறுவர்களை வளர்ப்பதில் சமூகம் முழுவதற்கும் ஒரு கடமை உண்டு. அந்தக் கடமையில் எழுத்தாளர்களின் பங்கு முக்கியமானது. சிறுவர்கள் மனதில் நல்லெண்ணமும், தூய சிந்தனையும், கடவுள் பக்தியும், தேசப்பற்றும் உருவாகி வளர்வதற்கு ஏற்றமுறையில்புத்தகங்களை உருவாக்கித் தர எழுத்தாளர்கள் முன் வர வேண்டும்.

இந்த நோக்கத்துடன் 'செல்வி பதிப்பகம்' 'தாயின் மணிக்கொடி' என்னும் நூலை வெளியிட்டுள்ளது. சிறுவர்க்கு நாட்டுப் பற்றை ஊட்டும் வகையில் இந்நூல் சிறப்பாக அமைந்துள்ளது. ஆசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும் எனது பாராட்டுகள்.

இந்த நல்ல முயற்சிக்குத் தமிழ் மக்கள் பேராதரவு தருவார்களாக!

சென்னை
24-5-66.

எம். பக்தவத்சலம்

# அஞ்சலி

பாரதநாடு பழம்பெரும் நாடு. பாரினில் அதற்கென்று ஒரு மதிப்பும் மாண்பும் என்றுமே உண்டு. நாம் பாரதமண்ணுக்குச் சொந்தம். நம் மண்ணை, யார் எப்போது சுரண்ட எண்ணிஞலும் சரி, சுரண்ட முனைந்தாலும் சரி, நாம் அவர்களைச் சும்மா விடவேமாட்டோம். அதுவும் நம் மரபு வழிப் பண்பாடாகும்.

இக்கருத்தை என்றென்றும் வாழ்த்தி வணங்குபவன் நான். அவ்வழிபாட்டிற்கு ஓர் ஆதரிசமாக இக்கதை அமைந்திருக்கிறது. குழந்தைகளின் உலகினுக்குப் பயன் நல்கும் கதை. என் கருத்தை வாழ்த்தும், மதிப்புக்குரிய கனம் முதலமைச்சர் அவர்களின் அன்பு பெரிது. அவ்வன்பிற்குப் பணிவுடன் தலைவணங்குகிறேன்.

தமிழ்நாடு அரசாங்கம் என்னுடைய 'பூவையின் கதைகள்' என்னும் நூலுக்குப் பரிசளித்துப் போற்றியுள்ள மகிழ்ச்சிகரமான இந்த நேரத்தில் செல்வி பதிப்பகத்தினர் என்னுடைய 'தாயின் மணிக்கொடி' யை மிகவும் சிறப்புற வெளியிட்டுள்ளார்கள். அதிபர் திரு. வீர. சிவராமன் அவர்கட்கு என் நன்றி உடைமை.

உங்கள் அனைவருக்கும் என் வணக்கமும் நன்றியும்.

பூவைமாநகர்
26—5—66.

பூவை எஸ். ஆறுமுகம்



# தோரண வாயில்

வஞ்சகச் சீனரின் சூதுமதி விளையாட்டுக்கள் உச்சக் கட்டத்தை எட்டிக் கொண்டிருந்த வேளை.

நம் தாய்த்திரு நாட்டின் வெற்றிக்காக ஆண்டவனைப் பிரார்த்தித்துவிட்டு, வகுப்பைத் தொடங்கினர் உபாத்தியாயர். அது கதை வகுப்பு. ஒரே கதையை ஆளுக்கொரு பகுதியாகப் பிரித்துச் சொல்லவேண்டும்.

கதைச் சுருக்கத்தை ஆசிரியர் சொல்லிவிட்டார்.


இப்போது மாணவர்கள் தாம் கதையைப் பின்னவேண்டும்.

இதோ, பூபாலன் புன்னகைபூத்த முகத்துடன் கதை சொல்லத் தொடங்கி விட்டான்.

ஆஹா! வகுப்புத் தோழர்-தோழியர்களுக்குக் கதை கேட்பதில்தான் எவ்வளவு ஆர்வம்!... எத்துணை ஆனந்தம்!!

# தாயின் மணிக்கொடி

# 1 பட்டத்து இளவரசன்!



சொல்கிறான்

**எனது அருமைத் தோழர்களே! தோழியர்களே!**

வணக்கம்.

கல்லும் மண்ணும் கதை சொல்லத் தொடங்கிய காலந்தொட்டு, புகழ் மண்டிக்கிடக்கிறது நமது தாயகம் என்று அடிக்கடி நம் பள்ளியில் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள் அல்லவா?

அத்தகைய சிறப்புப்பெற்ற நமது நாட்டிலே, மங்களபுரி, மங்களபுரி என்று ஒரு நாடு இருந்தது.

மங்களபுரியின் சிறப்புக்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், அந்நாட்டின் அவைப் புலவர் பாடிய பாடலொன்றின் கருத்தைச்சொன்னாலே போதும்! — "மங்களம் ஆட்சி புரியும் நாடு அது" என்று பாடியிருக்கிறார் அந்தப் புலவர் பிரான். இதிலிருந்தே அந்நாட்டின் பெருமை புரிகிறதல்லவா?

இப்படிப்பட்ட சீரும் சிறப்பும் கொண்ட நாட்டிலே விஜயசிம்மன் என்று ஓர் அரசன் ஆண்டு வந்தான். ஆட்சிக்குழு, அமைச்சரவை, அந்தரங்க ஆலோசனைச்

சபை, அறநெறி அமைப்பு என்று பலவகைப்பட்ட பிரிவுகளால் இயங்கிவந்தது அரசாட்சி. மன்னனது உயிர்ப்பான நெறிமுறை அரசினால்தான் அந்நாடு உயர்வடைகிறதென்னும் பழம் பாடலுக்கு ஒப்ப இந்த விஜயசிம்மன் ஆண்டு வந்தான்.

இம்மன்னனது மாண்புக்கு உதாரணமாகப் பல பல கதைகள் சொல்வது உண்டு.

ஒரு சமயம் :

விஜயசிம்ம ராஜா காட்டுக்கு வேட்டையாடச் சென்றானாம். அப்பொழுது, அவன் துரத்திச் சென்ற கவரிமான் அண்டை நாட்டுப் போக்கிரி மன்னனின் எல்லைக்குள் நுழையும் வேளையில், அவன் அதைத் துரத்திப் பிடிக்கும் கட்டத்தில் இருந்தானாம். இருந்தும் அவன் அதைக் குறி வைக்க ஒப்பவில்லையாம். மானத்தை உயிராய் மதிக்கும் கவரிமானைப் பற்றி அவன் அறிந்திருந்ததே அவனது மன மாறுதலுக்குக் காரணமாம்.

இன்னொரு சம்பவம் :

ஒரு முறை இவன் இரவில் ஊர்க்காவல் புரிய நகர் வலம் வந்து கொண்டிருந்தானாம். அப்பொழுது, ஊர்ச் சத்திரமொன்றின் வெளித் திண்ணையில் ஒரு பரதேசி பசியால் துடித்துக்கொண்டு படுத்திருந்தானாம். மன்னன் மாறு வேடம் தாங்கியவனாக, அந்தப் பரதேசியை எழுப்பி விவரம் கேட்டானாம். சத்திரத்து அதிகாரி தூக்கத்திலிருந்து எழ முடியா

தென்று மறுத்துவிட்டானும்! இதைக் கேட்ட வேந்தனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. குடிமகன் செய்த குற்றத்துக்கும் மன்னன் தானே பொறுப்பு? ஆகவே, அவன் அருகிலிருந்த கல்தூணில் ' மடார் மடார் ' என்று முட்டி மோதிக்கொண்டானும். ரத்தம் பீறிட்டது. அப்பொழுது, மன்னனது முடி தெரிந்து விட்டதாம்! அப்புறம், பரதேசியின் பசி பறந்துவிடக் கேட்கவா வேண்டும்?

இவ்விரு கதைகள் மட்டும் இப்போதைக்குப் போதும், விஜயசிம்மனது உயர்மனத்தை எடுத்துக் காட்ட!

கோனுயரக் குடி உயர்ந்து, அதன் மூலமாக மங்காத புகழ் பெற்று விளங்கிய மன்னன் விஜய சிம்மனுக்கு ஒரே ஒரு மைந்தன் இருந்தான். அவனே பட்டத்து இளவரசன். பெயர்: விஜயேந்திரன். அரசாட்சியின் ஒழுங்குக் கட்டுப்பாடுகளைப் பற்றி அவ்வப்போது அரசன் தன் மகனுக்குப் பாடமாகவும் செயல் மூலமும் கற்பித்து வந்தான். "**பகைவரால் கெடுக்கப்படாததாகவும், கெட்டுவிட்ட காலத்திலும் செழிப்பு குறையாததாகவும் உள்ள நாடே, நாடுகள் எல்லாவற்றிலும் சிறப்புடையதாகும்,** மகனே! இது என் வாக்கன்று. தமிழ்மறையின் வேதவாக்காகும்!......" என்று அறிவுரை வழங்கத் தவறமாட்டார்.

எதிரிகள் என்று அவருக்கு யாருமில்லை. ஆனல், அண்டை அயல் நாட்டினர் சிலர் அவரை எதிரி

யாகவே கருதினர். இவர்களிலே ஒருவன் நிலவுத் தீவு மன்னன். அவன் வஞ்சமாக விஜயசிம்மன் பேரில் படையெடுத்தபோது, அவனது வஞ்சத்தை அம்பலப் படுத்தியதுடன், இனிமேல் மங்களபுரி எல்லையினை அவன் தாண்டக்கூடாது என்று ஒப்பந்தமும் வாங்கிக் கொண்டான். இம்முறைப்பட்ட அரசியல் ராஜதந் திரத்திலும் வல்லவனாக விளங்கின விஜயசிம்மன், தன் புகழ் மங்காதிருக்கும்போதே, தன் அருமை மகன் இளவரசன் விஜயேந்திரனுக்கு மணம் செய்து பார்க்கப் பெரிதும் ஆசைப்பட்டான்.

ஒரு நாட்டின் அரசன் விரல் அசைத்தால் போதாதா?

மங்களபுரியே மணக்கோலம் பூண்டாற்போன்று திகழ்ந்தது.

பட்டத்து இளவரசனின் கல்யாணம் என்றால், சாமான்யமா?

இளவரசன் விஜயேந்திரன் தனது முறைப் பெண்ணான ராஜவல்லியையே இதயபூர்வமாக விரும்பினான்.

ராஜவல்லிதான் விஜயசிம்மனின் தமக்கை மகள்.

இருவரும் பிஞ்சுப் பருவம் முதல் ஒன்றாய்ப் பழகியவர்கள்.

விஜயேந்திரனுக்கும் ராஜவல்லிக்கும் கல்யாணம் நடைபெறுவதற்கான நாளும் கோளும் நிச்சயிக்கப் பட்டன.



அன்றுதான் முகூர்த்த தினம்.

ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் ஆஸ்தான மண்டபத்தில் கூடிவிட்டார்கள். ராஜமரியாதைகளும் முறைப்படி நடந்தேறின.

இளவரசன் விஜயேந்திரன் மணமேடையில் வந்தமர்ந்தான்.

மணமகளும் தோழியர் புடைசூழ வந்து மணமகன் அருகில் உட்கார்ந்தாள்.

மந்திரங்கள் ஒலித்தன.

முகூர்த்த வேளை நெருங்கியது.

பட்டத்து இளவரசன் விஜயேந்திரன், புரோகிதர் பணிவுடன் நீட்டிய மங்கலத் தாலியைக் கையில்

ஏந்தி, அதை ராஜவல்லியின் தங்கக் கழுத்தில் திருப்பூட்டும் தருணம், மங்களபுரிக் கோட்டையி லிருந்து அபாயச் சங்கு முழங்கி விட்டது.


அந் நேரத்திலே, இளவரசன் மட்டும்தானா வெகுண்டெழுந்தான்?

மன்னர்பிரான் விஜயசிம்மன் சிம்மமென உறுமி னார்!


ஏன், மங்களபுரியே புலியெனச் சீறத் தொடங் கியது!

காரணம் இதுதான்!

நிலவுத்தீவு மன்னன் கஜேந்திரபாகு மங்களபுரி மீது படையெடுத்து விட்டானாம்!...



# 2 கொட்டியது போர் முரசம்!



செண்பகவல்லி சொல்கிருள்

வகுப்பிலிருந்த மாணவ — மாணவியரிடையே பெரியதொரு சலசலப்பு உண்டாகின்றது. "திருமணச் சமயத்தில் போர் முரசு கொட்டுவதுகூட பண்டைநாளைய அரசியல் சூழ்ச்சிகளுள் ஒன்று போலிருக்கின்றதே!," என்று எல்லோரும் ஒருமுகமாக அதிசயித்தார்கள்; ஆத்திரப்பட்டார்கள்.

"அப்புறம் என்ன நடந்தது?" என்ருன் ஒரு மாணவன்.

"பாவம், ராஜவல்லி தவியாய்த் தவித்திருப்பாளே?" என்ருன் இன்னொரு மாணவன்.

"ஆமாம்; அப்பால் நடந்ததை நானே விளக்குகிறேன். பெண்மனத்தை நான்தான் உள்ளது உள்ளபடி விளக்க முடியும்!" என்று தொடங்கிருள் செண்பகவல்லி!

மணக்கோலம் பூண்டிருந்த மங்களபுரி அரண்மனை கண்மூடிக் கண் திறக்கும் போதிற்குள் போர்க்கோலம் பூண்டுவிட்டதை எண்ணுகையில், இது விதியின் செயல் என்றுதானே சொல்லத் தோன்றுகிறது!

ஆம்; விதியின் வினைதான் இது.

இல்லாவிட்டால், மங்களபுரி மன்னன் நேசக் கரம் நீட்டி, பழைய பகையையும் மறந்து பெருந் தன்மையுடன் நிலவுத் தீவு வேந்தனுக்கும் மண ஓலை அனுப்பியும், கஜேந்திரபாகு இவ்வாறு சூழ்ச்சி கொண்டு படையெடுத்திருப்பானா?

**பகையையும் நட்பாகச் செய்துகொண்டு நடக்கிற பண்பும் சீலமும் உடையவனது பெருந்தன்மையில் உலகம் தங்கியிருக்கவல்லது?** என்ற ஆன்றோர் மொழியை மெய்ப்பிக்க வேண்டும் என்பதே என் கருத்தும் ஆசையும் ஆகும், விஜயேந்திரா!" என்று விவரித்தான் மன்னர் மன்னன்.

ஆனால், கடைசியில் நடந்ததென்ன, பார்த்தீர்களா?

நிலவுத் தீவு மன்னன் தான் உடன்படிக்கை செய்து கொடுத்தபடி நடக்காமல், எல்லைக்கோட்டைத் தாண்டி மங்களபுரி மீது படை எடுத்து விட்டான். அவனது போர்ப்படை வரிப்புலிக்கொடி ஏந்தி முற்றுகையிட வந்துவிட்டன.

"திருமண முகூர்த்த வேளையைக் கெடுக்க வேண்டும் என்ற துர் எண்ணத்துடனேதான் கஜேந்திரபாகு இப்படிப் படையெடுத்திருக்க வேண்டும். அவன் படை எடுத்ததைப்பற்றித் துளியும் கிலேசப் படவில்லை, தேவி! ஆனால், நம் ஒரே மகன் திருமணம் இவ்வாறு அபசகுனம் பிடித்தமாதிரி தடங்கல் பட்டு விடப்போகிறதே என்றுதான் அச்சமும் அல்லலும் படுகிறேன்!" என்று வருந்தினான் மன்னன். ராணி மங்களாம்பிகையும் மெய் வருந்தினாள்; கண்ணீர் சொரிந்தாள்.

உடனே அரசன் விஜயசிம்மன் தன் குலதெய்வமான பவானித்தாயை நாடி ஓடி விழுந்தான். அவனது கோலத்தைக் கண்டு ஏவலாளர்களும் நடுங்கினர். "தாயே! அந்த ரகசியத்தை அம்பலப்படுத்தி விடாதே தாயே! என் மகன் திருமணம் தடைப்பட்டு விடுமா?... ஐயையோ!" என்று உருகினான்.

வெளிப்புற மதிலின் ஓரத்தில் நின்றது சாரட்டு வண்டி. அதில் காத்திருந்த ராணியின் பக்கமாக அமர்ந்தான் விஜயசிம்மன். சாரட்டு புறப்பட்டது. வழியில் இளவரசன் கையில் வாள் ஏந்தி வீறு கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தான்.

அருமைப் பிள்ளையின் போர்க்கோலம் கண்டு பெற்றோர்கள் துடி துடித்தனர்.

"திருப்பூட்டக் கூட நினைப்பின்றி இப்படிப்

புறப்பட்டு விட்டாயே, மகனே?'' என்று புலம்பினாள் தாய்.

"முதலில் எனக்கு என் நாடும், என் நாட்டின் மானமும் தான் உயிர்; அதுதான் என் முதல் லட்சியம், தாயே! என் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்திடச்செய்து பார்ப்பதுவே இப்போதைக்கு என் கடமை, கவலையெல்லாம்! எதிரியின் வஞ்சத்தை வீழச்செய்து, அந்த எத்தன் கஜேந்திரபாகுவின் அடாத செயலுக்குப் பாடம் போதித்த பிறகுதான் என் திருமணம்!'' என்று வீரம் விளைந்த செருக்குடன் முழக்கமிட்டான் இளவரசன்.

அவன் பேசி முடிப்பதற்குள், வீராங்கனையாக வீரத்திலகம் திகழ ஓடிவந்தாள் ராஜவல்லி. "அத்தான்! நான் உங்களுடைய சொத்தாக என்றோ நிச்சயிக்கப் பட்டவளல்லவா? ஆகவே, உங்களது நாட்டுப்பற்றுக்கு வாழ்த்துக்கூறி அனுப்பவேண்டியது எனது கடமை யாகும். ஆனால் ஒரு நிபந்தனை. உங்களுடன் போருக்கு நானும் வருகிறேன். இந்த ஒரு வரத்தை மாத்திரம் அருளுங்கள், அத்தான்!'' என்று நீர்சோர வேண்டிக்கொண்டாள் அவள்.

விஜயேந்திரன் கம்பீரப் பார்வையைச் சுழற்றினான். சுழன்ற விழிகளுடன் நின்ற வடிவழகி ராஜவல்லியைப் பார்த்தான். "அன்பே உன்னுடைய பதிபக்தியும் ராஜபக்தியும் போற்றப்பட வேண்டியவையே. ஆனால், நீ ஐதீகப்படி என் சொத்தாகவும் உரிமையாகவும்



இன்னமும் ஆகவில்லையே! இந்நிலையிலே உன்னை என்னுடன் எங்ஙனம் நான் அழைத்துச்செல்ல முடியும்? போர்முடிந்து, வெற்றியுடன் வாகைசூடித் திரும்பினதும், உன்னை என் இதய ராணியாக்கிக் கொள்கிறேன்!" என்று மறுமொழி உதிர்த்தான் இளவரசன்.

இதைக்கேட்ட சடுதியில் ராஜவல்லி தன் கைப் பிடிப்பிலிருந்த அந்தத் தாலியை எடுத்து விஜயேந்திரனிடம் நீட்டி, "இந்தாருங்கள் அத்தான்!... உங்கள் கரங்களால் எனக்குத் தாலி கட்டுங்கள் முதலில்!" என்று மீண்டும் கெஞ்சினாள்.

அதேகணத்தில், போர்முரசம், அபாய அறிவிப்பின் உச்சக்கட்டத்தின் நிலையை அறிவிக்கும் வகையில் முழங்கிற்று.

அவ்வளவுதான்!

இளவரசன் புரவிமீது தாவிஏறிக் குந்திக்கொண்டு கையில் வேலும் கேடயமும் ஏந்திப் புறப்பட்டான். காலைச் சூரியனின் கதிர்களைக் கால்களில் மிதித்துக் கொண்டு பறந்தது குதிரை.

பெற்றோர்களது ஆசிபெறக்கூட இளவரசனுக்கு நேரமில்லை.

ராஜவல்லி மயங்கிச் சாய்ந்தாள்!

# 3 ஊழின் வலி



சொல்கிறன்

குண்டூசி போட்டால், குண்டூசி விழும் சத்தம் கேட்கும். அப்படிப்பட்ட வகையில் அங்கே நிசப்தம் நிலவியது.

ராஜவல்லியின் மயங்கிய நிலையினைக் கேட்டதும், வகுப்பில் துளிச்சத்தம் கேட்க வேண்டுமே!— ‘பாவம்!’ என்று அனுதாபப் படலானுர்கள் மாணவர் குழாம். “ம்!” என்று அங்கலாய்த்தவளாக ஆசனத்தில் அமர்ந்தாள் செண்பகவல்லி.

“மேற்கொண்டு என்ன கதை?... என்று கேட்டார், வகுப்பு வாத்தியார், ஒன்றுமே தெரியாதவர் போல!

விஷமச் சிரிப்புடன் எழுந்தான் வீரமணி. “ கேளுங்கள் ” என்ருன்.

தெற்குப் புறத்தே மங்களபுரி நாடு.

வடக்கே பாலாறு. மிகுந்த நீர்ப்பரப்பு.

அதையடுத்து இருந்தது நிலவுத்தீவு. அழகிய தீவு. மரக்கலமும் மோகினிப் பாலமும் அரசாங்க முத்திரையுடன் இயங்கின!

மங்களபுரிக்கும் நிலவுத் தீவுக்கும் இடையில் எல்லைக்கோடு ஒன்று இவ்விரு நாடுகளுக்கும் எல்லை சொல்லியது.

ஆமாம்; நம் பாரதத்துக்கும் சீனுவுக்கும் எல்லை யாக மக்மகான் கோடு இருப்பதைப் போலத்தான்!

ஒப்பந்த ஷரத்துக்களை மீறி நடப்பதென்ருல், எந்நாட்டவர்தான் சும்மா இருப்பார்கள்? இல்லை நீதிதான் சும்மா இருக்குமா?

கேளுங்கள் என் கதையின் மிகுதிப் பகுதியை!

ராஜவல்லி மயங்கி விழுந்ததைக்கூட அறியாதவ ஞகக் காற்றினும் கடுகிப்பறந்த விஜயேந்திரன் வில் விஜயனின் காம்பீர்யத்துடன் குதிரையைச் செலுத்தி ஞன். தொடர்ந்து வந்த தன் நாட்டுப் படைகளின் குளம்பொலியும் வீரமுரசங்களின் சத்தமும் மாறிமாறிக் கேட்டன. தன் தாய்த் திருநாட்டின் ஆலயமணிச் சின்னம் பொறித்த கொடிகளிலே அவன் தன் குல தெய்வமான அன்னை பவானி தேவியைத் தரிசித்த

வாறே திட சித்தத்தவனுக, புரவியைத் தீவிரமாய்ச் செலுத்தினுன்.

அதோ, எல்லைக் கோடு!

நிலவுத் தீவுப் படையினரின் வரிப்புலிக் கொடிகள் வெஞ்சினத்துடன் பறந்து வர, படைகளின் தலைமகனுக கஜேந்திரபாகு குதிரைமீதமர்ந்து வந்தான்.

எதிரும் புதிருமாக நின்றனர், கஜேந்திரபாகுவும் விஜயேந்திரனும்.

கஜேந்திரபாகு இளவரசன் விஜயேந்திரனைக் கண்டதும் ஏனே ஒரு கணம் செயலிழந்தான்.

விஜயேந்திரனே அந்தப் பயங்கர மனிதனின் கொடுவாள் மீசையை நினைத்து மனத்தில் எள்ளி நகையாடினுன். 'இவ்வளவு பெரிய மீசை இருந்து பயன் என்ன? கடைசியில் இதோ நொடிப் பொழுதில் இவன் என்னிடம் மண்ணைக் கவ்வப் போகிருனே?... என்று எண்ணிப் பெருமிதம் அடைந்தான் மங்களபுரி இளவரசன். மகாலயதீரத்தில் இருந்த ராஜகுருவின் குருகுலத்தில் வாசம் செய்து, அறுபத்து நான்கு தவம் இருந்து பாடம் பெற்றவனுயிற்றே அவன்!...

மங்களபுரிப் படைகளும் நிலவுத் தீவுப் படைகளும் பொருதின.

கொடிகள் சிதைந்தன.
குதிரைகள் சாய்ந்தன.

தலைகள் உருண்டன.
ரத்தம் ஆறுனது.
ஆம்; இருதரப்பிலுமே தான்!

கடைசியில், கஜேந்திரபாகுவும் விஜயேந்திரனும் குதிரைகளிலிருந்து குதித்துப் போரிட்டனர்.

ஆஹா! விஜயேந்திரனிடம்தான் எத்துணை நுணுக்கம், மிடுக்கு, சாதுர்யம்!...

கஜேந்திரபாகுவின் உடல் களைத்த நேரத்தில், அவன் தரப்பைச் சேர்ந்த ஆள் ஒருவன் தந்திரத்துடன் விஜயேந்திரன் முதுகின்மீது கள்ளக் கத்தி ஒன்றைச் சொருக எத்தனித்தான்.

ஆனால் என்ன ஆச்சரியம்!

கள்ளக் கத்தியும் கையுமாக நின்ற அதே ஆள் அடுத்த இமைப்பொழுதில் தலைகுப்புற, குருதி கொப்புளிக்க மண்ணிலே சாய்ந்து விட்டான். அவனை அங்ஙனம் வீழச்செய்த பெருமை, அங்கு நின்ற வேறொரு புது யுவனையே சாரும்!... தலை முண்டாசும் தானுமாக நின்றான் அவன்! ஆஹா, அவன் கண்களுக்குத்தான் எத்தனைக் கவர்ச்சி!...

இதனைக் கண்ட இளவரசன் சுதாரிப்புக்கொண்டான். உணர்ச்சிகள் சுழித்தன. வீரவாள் விளையாடியது. கேடயங்கள் கெக்கலி கொட்டின. குதிரை சிம்மமாகக் கனைத்தது.



நிலவுத்தீவு மன்னனின் கை ஓய்ந்து விட்டதா?

ஏன் அவன் அப்படி வைத்த கண் வாங்காமல் விஜயேந்திரனையே வெறிக்க வெறிக்கப் பார்க்க வேண்டும்?

மங்களபுரி இளவரசன் வெகு லாகவமாக மடக்கி விட்டான் நிலவுத்தீவு மன்னனை!

நிலவுத்தீவு மன்னனின் கைவாள் நொறுங்கி, இள வரசனின் பாதங்களைச் சரணடைந்தது.

வெற்றி, வீரமகன் விஜயேந்திரனுக்கே!

**உண்மைதான்:**

'ஊழைவிட மிக்க வலிமையுள்ளவை வேறு எவை உள்ளன? ஊழை விலக்கும் பொருட்டு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும், அங்கும் தானே அது முன்வந்து நிற்கும்!...

ஏகச் சக்ராதிபதியாக விளங்க வேண்டுமென்னும் நச்சுமனம் கொண்டு நடந்த நிலவுத்தீவு மன்னனிட மிருந்து அடிமைச் சாசனம் எழுதி வாங்கிக்கொண்டான் விஜயேந்திரன். வெற்றித் திருவிளங்க, வாகைமணம் கமழ, வீர நகை சிரிக்க, இளவரசன் புரவிமீது புறப் பட்டான்!



# 4 அழகி வாசவி



ரமணன் சொல்கிறான்

“அப்பாடா!” என்றனர் மாணவர்கள். மாணவிகளும் அதே குரலில் சந்தோஷம் அடைந்தனர். “கெடுவான் கேடு நினைப்பான்!, என்பது எவ்வளவு உண்மை!” என்றும் ஒருவருக்கொருவர் ஆனந்தக்குரலில் பேசிக்கொண்டனர்.

அதற்குள் ஒரு முணுமுணுப்புத்தொனி வகுப்பில் கேட்டது. எல்லோரும் திரும்பினர்.

ரமணன்தான் முணுமுணுத்த மாணவன்.

அவன் எல்லோரது பக்கமும் பார்வையை விஷமத்தனமாகப் பார்த்தபடி சொன்னான்: “அதற்குள் சந்தோஷப்பட்டால், அப்புறம் கதை முடிந்து விடாதா? நின்றுவிட்ட திருமணம் நடந்துவிடப் போகிறதென்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுதான் கிடையாது. கேளுங்கள் பின் கதையை!”

விஜயேந்திரன் களைத்துச் சளைத்துப்போன நிலை யுடன் குதிரையைச் செலுத்தினான். மஞ்சள் வெய்யில் மறையும் நேரம் அது. அக்கினி ஆறு, ஆரவல்லி மலைச்சரடு, அழகிகுளம், ஆனந்த பைரவி புரம் என்று பலபல பகுதிகளும் ராஜமரியாதை செய்து வழிவிட்டன என்றால், இளவரசனுக்குச் சுற்று வட்டத்தில் இருந்த கியாதியும் கீர்த்தியும் எத்தகையது என்பதனை நீங்களே யோசித்துக் கொள்ளுங்களேன்!

குதிரை பறந்து கொண்டிருந்தது. பசி வயிற் றைக் கிள்ளிக் கொண்டிருந்தது.

அரமனையாய் இருந்தால், நாழிக்கு ஒரு உணவும் வேளைக்கு ஒரு பானமும் கொண்டுவந்து கொடுப்பார் களே, தாதியர்!

ஆனால் இப்போது, இளவரசனுக்கு இருந்த பசியைச் சொல்லி முடியாது. குண்டோதரன் பசியைப் பற்றிய கதைதான் உங்களுக்குத் தெரியுமே! — அப் படி வேண்டுமானால் உதாரணம் வைத்துக் கொள்ள லாம்!

ஒருகணம் விஜயேந்திரன் அப்படியே மலைத்துப் போய் விட்டான். லகானின் பிடியும் மலைத்தது. இடுப் பில் செருகியிருந்த நிலவுத்தீவு மன்னனின் அடிமைச் சாசனத்தைத் தடவிப் பார்த்தவனாக, நெற்றிமேட்டில் கைவைத்து அழுத்திக் கொண்டான். நடுநெற்றியில்,

நெற்றிக்கண்ணைப் போன்ற அமைப்பில் ஒரு மச்சம் இருந்தது அவனுக்கு. அது இப்போது தட்டுப்பட லாயிற்று.

அதே தருணம், ஔவைப்பாட்டி பாடின வயிற்றுப் பசிக் கோணங்கிக்கூத்துப் பாடலும் அவனுக்கு நினைவு வந்தது. 'இடும்பைகூர் என் வயிறே!' என்று அவனும் தனக்குள் பாடிய வண்ணம், சுற்றுமுற்றும் நோக்கி னன். அடி ஒற்றி வந்த அந்தரங்க ஒற்றர்களேயோ, அல்லது அவனது மெய்க்காப்பாளர் சேனையையோ, பின்காவல் குழுவையோ காணேம்! "எந்தப் படையின் உதவியையோ, எந்த ஒற்றனின் துணையையோ நான் விரும்பாதவன்!" என்று அடிக்கடி இளவரசன் முழங் குவது உண்டு. அவ்வாசகத்தை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அவரவர்கள் தத்தம் போக்கில் செயற் பட்டனரோ? என்னவோ?

விஜயேந்திரன் எப்படி மயங்கி மண்ணில் விழுந் தான் என்றே அவனுக்குத் தெரியாது. எல்லாம் பசி மயக்கம். பசி வந்திடப் பத்தும் பறந்து போகுமே!

குளிர் தென்றல் இதமாக வீசியது.

விஜயேந்திரன் அப்போதுதான் கண்களை மலரத் திறந்தான். உதடுகளில் இன்பச்சுவை பட்டது. உடம் பில் ஒரு புதுத்தெம்பு ஊறியிருந்தது. சுற்றுமுற்றும் அவன் நோக்கினன். "யார் அது?" என்று கேட்கி ருன். திறந்த வெளியிலிருந்து யாரோ ஓர் இளைஞன்

தோன்றுகிருன். பார்க்க வெகு லட்சணமாகக் காணப் பட்டான். அவனை இளவரசன் முன்பின் பார்த்ததே இல்லை.

"யார் நீ ?" என்று வினவினன் யுவராஜா.

"நான் உங்கள் அன்பின் அடிமை!..."

"அப்படியா ?"

"ம்!"

"ஊர் ?"

"யாதும் ஊரே; அனைவரும் உற்றவர் உறவினரே! நீங்களும் அப்படித்தான். என் கருத்து தவறல்லவே, மன்னர் குமாரா?"

"இல்லை, இல்லை!"

"உங்கள் அன்பு பெரிது. அதற்கு என் நன்றி!"

"உன்னைப் போலவே நானும் அன்பை மதிப் பவனே!... '**அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பேயாகும்' என்ற பொய்யா மொழியின் தத்துவத்தை மதிப்பவன் நான்!...**"

"ஆஹா! என் பாக்யமே பாக்யம்!" என்ருன் இளைஞன்.



"உன் பெயர் என்ன?" என்று கேள்வி விடுத்தான் இளவரசன்.

"வாசவன்!"

"இந்திரனுக்குரிய பெயரல்லவா இது? பேஷ், பேஷ்!" என்று பாராட்டினான். மின்னலாக ஒரு நினைவு ஊடுருவியது. ஊஹூம், எனக்கு ஆபத்துக்கு உதவிய அந்த இளைஞன் அல்ல இவன்! ...

அடுத்த கணத்தில், அவ்விளைஞன் தனது அழகிய கண்களால் சிரித்தபடி, கையிலிருந்த கோப்பையை இளவரசனிடம் கொடுத்தான். திராட்சைரசம் அதில் இருந்தது. வாசனை அற்புதமாக இருந்தது.

இளவரசனுக்கு இருந்த பசிக்கிறக்கத்தில் அதை ஆர்வத்துடனும் நன்றியறிதலுடனும் வாங்கி ஒரே மடக்கில் குடித்தான்.

இமை கொட்டும் பொழுதுகூட கழிந்திருக்காது.

இளவரசன் விஜயேந்திரன் வேர் அறுந்த மரமாகத் தரையில் சாய்ந்தான்.

அப்பொழுது, விதியையே வென்றுவிட்டது போன்ற அகங்காரச் சிரிப்பு ஒன்று இடியென முழக்கமிட்டதையோ, அல்லது, அவன் பெட்டிவண்டி ஒன்றில் கிடத்தப்பட்டு அழைத்துச் செல்லப் பட்டதையோ அவன் எங்ஙனம் அறிவான்?

ஒளியில் கண் மூடியவன், இருட்டில் கண் விழித்தான்!

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று உரக்கக் குரல் தந்தான்.

பதில் ஏதும் வரவில்லை.

ஒற்றர்களின் ரகசியப்பெயர்களை ஒலிவடிவமாக்கிக் கூப்பிட்டான்.

அதற்கும் மறுமொழி எதுவும் வரக் காணோம்!

வாசவன் என்ற புது நண்பனின் நினைவு வந்தது.


அது தருணம், புத்தம்புதிய சுகந்தம் காற்றில் மிதந்து வந்தது.

இளவரசன் அந்த இனிய நல்வாடையில் தானே மிதப்பது போல உணரலானுன்.

விஜயேந்திரன் விழிகளை அகலத் திறந்த போது, அவனுக்கு ஓர் உண்மை பளிச்சிட்டது.

"நான் இந்த பாதாளக் குகைக்கு எப்படி வந்தேன்?" என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். குரல் பலமாக ஒலி எழுப்பவே, எதிரொலி எழும்பியது.

அடுத்த மின் வெட்டும்வேளையில், "ஆ! ..." என்று இளவரசன் அதிசயித்தான்!



# 5 பாதாளக் குகை மர்மம்

தமிழரசன்



சொல்கிறான்

"நல்ல இடத்தில் அல்லவா நம் நண்பன் கதையை நிறுத்தி விட்டான்?" என்று அங்கலாய்த்துக் கொண்டான், ரமணனின் அருகில் இருந்த தமிழரசன். பிறகு அவனே பேச ஆரம்பித்து விட்டான். "கதை என்றால் அப்படி இருப்பதுதானே அதன் இயல்பு? ... மறைவுக் கவர்ச்சி இல்லையென்றால், அதாவது மர்மம் ஏதும் இல்லாவிட்டால் அப்புறம் இவ்வளவு மாணவ-மாணவிகளும் கம்மென்று இருக்க இயலுமா?" என்று தெளிவுரை தந்தான் தமிழரசன்.

"என்னை மறந்து விட்டாயே? சரி ... கதையைத் தொடங்கு தமிழரசா!" என்றார் ஆசிரியர்.

வாயில் ஈ நுழைவதுகூடத் தெரியாமல், அப்படியே அதிசயித்துப்போனுன் இளவரசன்.

ஏன் தெரியுமா?

ஊஹூம், உங்களால் அனுமானம் செய்யவே இயலாது!

ஏன் தெரியுமா?

அது அவ்வளவு சூட்சுமமான அதிசயம்!

ஆம்; பாதாளக் குகையிலே அவன்முன் தோன்றியது ஒரு பெண் உருவம். அழகியிலும் அழகி. இதை விட வேறு விளக்கம் சொல்லத் தெரியாத பருவம் எனக்கு. உங்களுக்கும் அப்படித்தான், இல்லையா?

சரி.

இதோ, கதை தொடர்கிறது; காதல் விரிகிறது!

பேரழகியாகப் பொலிவு கொண்டு விளங்கிய அந்தப் பெண்பதுமையை இமை நோகப் பார்த்து மங்களபுரியின் மங்காத செல்வம் விஜயேந்திரன், "யார் நீ?" என்று கேட்டான்.

"நான்தான் வாசவன்!" என்று முறுவல் நகை பூத்தாள் பெண்.

"ஓஹோ! எனக்குத் திராட்சை ரசம் கொடுத்தானே அந்த இளைஞன் நீ?... அப்போதே உள்ளுக்குள் ஒரு

சந்தேகம் இடறியது. நானே இடறி விழுந்து விட்டேன். பெண்கள் சாகஸக்காரிகள் என்று சும்மாவா சொல்கிருர்கள்? பேஷ்!... உனக்கு இன்னும் என்னென்ன வேடம் புனையத் தெரியும்? .. சொல்... நடக்கவிருக்கும் என் திருமண வைபவத்தன்ருே, அல்லது, அதையடுத்து வரக்கூடிய எனது பிறந்த நாள் விழாவன்ருே உனக்குப் பரிசு தருகிறேன்!" என்ருன் பட்டத்து இளவரசன்.

அந்தப்பெண் நாணம் மேலிட, குனிந்த தலையுடன் நின்ருள். தீவட்டிகளின் வெளிச்சத்தில் அவளது அழகிய வதனம் சோபை கூட்டியது.

"உன் பெயர் என்ன பெண்ணே?"

"என் பெயர் வாசவி, இளவரசே!"

"அழகாகத்தான் இருக்கிறது!", என்ருன் அவன்.

"உங்களைக் காட்டிலுமா?" என இடைமறித்தாள் வாசவி.

அவளுடைய, பேசும் கண்களைக் காணக்காண அவனுக்கு ஆறவில்லை. அந்தக் கண்கள் அவனுக்கு ராஜவல்லியின் பேசும் விழிகளை நினைவூட்டின, மெய் சிலிர்த்தான். அதே நொடியில், அவனுக்குத் தன்னை எதிரியின் வாளிலிருந்து காப்பாற்றிய புது இளைஞன் ஒருவனின் அந்த அழகுக் கண்களின் ஞாபகமும் வந்தது.

இத்தகைய போராட்டத்தில் மனம் பின்னியிருந்த பொழுது, அவன் திகைப்புடன் இடுப்பில் கையை நெருடிப் பார்த்தான். மறுவிஞடி, அவன் தன்னுடைய இடைவாளைச் செருகி எடுத்தான். "பெண்ணே! இப்போதுதான் புரிந்து கொண்டேன் உன் சுயருபத்தை!... நீ நிலவுத்தீவுக் கள்ளி! **பொய்யாமை என்னும் அறத்தை உண்மையாகவே போற்றி ஏற்றுவாழ முடிந்தால், மற்ற தர்மங்களைச் செய்யாதிருத்தலும் நல்லதே என்னும் மூதுரையை மதித்து வழி நடப்பவன் நான்.** என்னை உன் அழகோ, சூதோ ஒன்றும் அசைத்துவிட முடியாது சொல்! என்னுடைய இடுப்பில் இருந்த பத்தரம் எங்கே?... சொல், பெண்ணே, சொல்! சொல்லா விட்டால், உன் தலை உன்னிடமிருந்து பிரிந்து போகும்! ம்!" என்று ஆத்திரத்துடன் கத்தினன் அவன்.

"இளவரசே, பொறுமைக்கு இலக்காகும் இந்தப் பூதேவியைப் பாருங்கள்!" என்று வேண்டினுள் வாசவி.

அவ்விடத்தில், அவள் காட்டிய திசைப்பகுதியிலே, அந்த அடிமைப்பத்தரம் பத்திரமாகக் கிடந்தது.

"நான் அதை எடுக்க வில்லை. அதுவே தன்னுலேயே நழுவி விழுந்திருக்கிறது!"

"அப்படியா?" என்று சமாளித்தான் இளவரசன். அவள் பேச்சு உண்மையாகவே பட்டது.

'அப்படி என்றால், என்னை மயக்கி யார் இங்கு கொண்டு வந்தது?" என்றான்.

"நான்தான்!"

"ஏன்?"

"உங்களை அடைய எண்ணி!"

"ஆ"

"அதிசயிக்காதீர்கள் இளவரசே!" நான் அனாதை தான் பொருளிலே. ஆனால், அழகில் மட்டும் அனாதையல்லள்!... உங்களை உங்களது பிறந்த நாள் விழாவில் கொலு மண்டபத்தில் கண்டதிலிருந்து, விட்ட குறை – தொட்டகுறையோ என்னவோ, உங்களது அழகுப்பிம்பம் என்னுடைய மனத்தில் ஆழப் பதிந்து விட்டது. நான் ஓவியக்காரி. என் சித்திரங்களிலே, உங்கள் உருவமே இடம் பெற்றது. இதோ, பாருங்கள், பிரபுவே!" என்று சொல்லி, உயிர்ச் சித்திரம் ஒன்றை எடுத்து வந்து நீட்டினாள் வாசவி.

விஜயேந்திரன் வியப்புடன், தன் ஓவியத்தையே பார்த்தது பார்த்தபடி வீற்றிருந்தான்.

"உன்னை நம்பலாமா?" என்று ஐயத்துடன் கேட்கிறான் குமார ராஜா.

" இந்தக் கேள்வியைச் சொடுக்கி என்னைச் சித்திரவதை செய்வதற்குப் பதிலாக, உங்கள் வீர வாளை என் மார்பில் பாய்ச்சிவிட்டிருக்கலாமே!" என்று கண்ணீர் சொரிந்தாள் வாசவி.

இளவரசன் அவளது கண்ணீரை நம்பினான்.

வாசவி ஏதோ பானம் கொணர்ந்துவந்த அக் கோப்பையை விஜயேந்திரனின் கைகளைப்பற்றிக் கொடுத்தாள்.

அவன் வாங்கி இதழருகே கொண்டு போனபோது, அதைத் தடுத்தது ஒரு கை. அழகிய கை அது!

ஏறிட்டுத் திரும்பினான் இளவரசன்.

" நீயா? " என்றான் அவன்.

முன்னர் அவனைக் கத்தி வீச்சிலிருந்து காத்த, முன்பின் தெரியாத அந்தப் புது இளைஞனே அவன்!

" ஆம், இளவரசே! " என்று வணங்கினான் அவன், தலைப்பாகை அசைய!

" ஏன் என்னைத் தடுத்தாய் நீ? " என்று வினவினான் இளவரசன்.

" அது, மது!..." என்றான் இளைஞன்.


அதற்குள், தன்னைச் சாடிவந்த வாசவியைச் சமாளிக்கத் தயாரான அவ்விளைஞன் பதட்டத்துடன்

விலகி, கைவாளை எடுத்த அவசரத்தில், அவ்விளைஞனின் தலைப்பாகை கீழே விழுந்தது.

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி விளைந்தது.

"ராஜவல்லி! .." என்று கூவினான் மங்களபுரி இளைய ராஜாவான விஜயேந்திரன்.

ராஜவல்லியின் கைப்பிடியில் இருந்தது நிலவுத்தீவு அரசனின் அடிமை ஒப்பந்த ஓலை!



# 6 “ராஜவல்லி!”



உமா சொல்கிறாள்

தாகத்திற்குத் தண்ணீர் பரிமாறப் பட்டது.

எல்லோருடைய கரங்களிலும் தண்ணீர்க் குவளைகள் இருந்தனவே தவிர, அவர்களில் யாரும் தண்ணீரைக் குடிக்கவில்லை.

ஒரேகட்டத்தில் இரண்டு அதிசயங்களை வெளிப்படுத்தியதனால் உண்டான வியப்புணர்வு அவர்களை மலைக்கச் செய்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

“தண்ணீரை முதலில் குடியுங்கள்; பெண்மனத்தின் வெவ்வேறு மன இயல்புகளை நான் சொல்லக் கேட்பதற்கு உங்களுக்குப் பொறுமை இருக்க வேண்டாமா?” என்று நாசூக்காகத் தெரிவித்துக் கதையைப் பின்னலானாள் உமா.

"ராஜவல்லி!" என்று மங்களபுரி நாட்டின் வருங் கால அரசன் விஜயேந்திரன் அழைத்தானல்லவா?

ஆம்; அவன் அவளைப் பெயரிட்டு ஒருமுறை மட்டுமா அழைத்தான்? அதுதான் இல்லை. பலதடவை கூப்பிட்டான். கூப்பிட்டும், அவள் ஏறெடுத்துப்பார்த் தால்தானே?

ஒருகால், தன்னையும் போருக்கு உடனழைத்துச் செல்லுமாறு வீர மங்கையாக விளங்கி விடுத்த வேண்டுகோளை இளவரசன் நிறைவேற்ருமல் பறந்து விட்டானே?– அதனுல் அவள் கோபம் கொண்டிருக்கக் கூடுமோ?

அவன் தன்னுடைய மாமன் மகளை ஆவலுடன் நெருங்கினுன். அன்று போர்க்களத்தில் தனக்கு உதவிய இளைஞனின் கண்களைக் கண்டபோதே நெஞ் சம் நெகிழ்ந்த விதத்தையும் அவன் மறந்துவிட வில்லை; மறந்து விடவும் முடியாது. அவன் கொண்ட சந்தேகம் ஊர்ஜிதமானது. இப்போது உண்மையும் புலனுகிவிட்டது. ஆகவே, உரிமையுடன் "ராஜ வல்லி!" என்று மீண்டும் குரல் கொடுத்தான்.

ஆனுல் ராஜவல்லியோ அந்தக் குரலையோ, அல் லது, அந்தக்குரலைக் கொடுத்தவனையோ தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

அதற்குள், ராஜவல்லியை நெருங்கிய அழகி வாசவி, "உனக்கு இளவரசரைத் தெரியுமா இதற்கு முன்பாகவே?" என்று கேள்வி கேட்டாள்.

அதற்கு ராஜவல்லி தலையைப் பலமாக உலுக்கி விட்டு, "எனக்குத் தெரியவே தெரியாது அம்மா!" என்று உறுதியான பாவனையுடன் செப்பினாள் அவள்.

"உண்மையாகவா?" என்று கேட்டு விட்டு கையிலிருந்த சவுக்கை முடுக்கினாள். சவுக்கின் அடி ராஜவல்லியின் மேனியைத் தழுவியது.

"ஆம், அம்மா!" என்று வெகு நயமான பணிவுடன் பதில் சொல்லி நின்றாள் ராஜவல்லி.

இவற்றையெல்லாம் காதுகொடுத்துக் கேட்டு நின்ற விஜயேந்திரனோ அப்படியே செப்புச் சிலையானான்! அவன் பார்வை ஜாடையாக ராஜவல்லியின் பக்கம் திரும்பியது. அப்போது அவனைப் பார்த்த பார்வையில் இருந்த சமிக்ஞை அவனுக்கு ஆறுதல் ஈந்தது. உடனே தற்காத்துக்கொண்டான் அவன்.

"வாசவி! மனமயக்கத்திலே நான்தான் சற்று நினைவு பிசகிப் போய்விட்டேன். இந்தப்பெண் ராஜவல்லி, எங்கள் மங்களபுரியினைச் சார்ந்தவள். அரண்

மனைத் தாதியர் கூட்டத்தைச் சேர்ந்தவள். அதுதான், பார்த்தமுகம் என்ற நனவில் நினைவைத் தடுமாறவிட்டேன். **'கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராது வாழ்கின்றவளே பெண்'** என்னும் அறமொழிக்கு ஏற்ப வாழும் பெண்களின் பட்டியலைச் சேர்ந்த பெண் இவள். அதோபார், அவள் கழுத்தில் தவழுகிற தாலியை! " என்று விஸ்தாரமாக எடுத்துரைத்தான் இளவரசன்.

இதைக் கேட்டதும் வாசவிக்கு நிம்மதி உண்டானது. ராஜவல்லியின் கழுத்திலிருந்த தாலி வேறு அவளுக்கு 'ஒட்டிக்கு இரட்டியான' மகிழ்ச்சியைத் தந்தது.

"சரி; நீ தப்பிப்போ! .. என் வழியில் குறுக்கிடாதே, சகோதரி!" என்று ராஜவல்லியிடம் வேண்டி, அவளுக்குப் பணமுடிப்பு ஒன்றையும் கொடுத்து வழியனுப்ப முயற்சி செய்தாள் வாசவி.

அப்போது ராஜவல்லியும் புறப்படும் நோக்கத்துடன் நிலைமறந்த நிலையுடன் நின்றாள்.

வாசவிக்கு ஆனந்தம் தலைகால் புரியவில்லை. ஆகவே, ஜல்-ஜல் என்று சலங்கை ஒலிக்கப் பரதம் பயின்று ஆடினாள். ஜதியும் சுதியும் இணைய, லயமும் பாவமும் சேர அவள் ஆடினாள்.



கலைதாசனை விஜயேந்திரன் மதுவால் மயங்கிய வனைப் போன்று நாகப்பாம்பாகக் கட்டுண்டு கிடந் தான்.

இதைக் கண்டு உள்ளம் கொதித்தாள் ராஜவல்லி; உயிர் துடித்தாள்!

ராஜவல்லி தன் குலதெய்வத்தை மனத்தில் பதித்து வழிபட்டு, அவ்விடமிருந்து புறப்பட நகர்ந் தாள்.

அதுசமயம்:

"துரோகி!" என்றொரு சிம்மக்குரல் கேட்டது.

அம் மூவருமே திரும்ப வேண்டியவர்கள் ஆயினர்.

அடுத்த இமைப்பொழுதில், வாசவியைக் கைது செய்தான் ஒருவன்.

அருகில் நிலவுத்தீவு மன்னன் கஜேந்திரபாகு நின்ருன்!

விஜயேந்திரன் திக்குத் திசை பிடிபடாமல் தவித்தான்.

“அன்பரே! நீங்கள் ஊகித்துச் சொன்னமாதிரி நான் கஜேந்திரபாகுவின் கைப்பாவைதான். உங்களை என் கைப் பாவையாக்கவே நான் இந்தப் பாதாளக் குகைக்கு உங்களைக் கொண்டுவந்தேன். வந்த இடத்தில் உங்கள் அழகுக்கும் அன்புக்கும் அடிமையானேன். உங்களை நயமாக வஞ்சித்து, உங்கள் வசமுள்ள அந்த அடிமைப் பத்திரத்தை நான், கைப்பற்ற வேண்டுமென்பதே எனக்கு இடப்பட்டிருந்த அரசாங்கக் கட்டளையாகும்!” என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறி நிறுத்தினுள் வாசவி.

“நிலவுத்தீவின் சூழ்ச்சிகள் விளையாட்டு மட்டுமல்லாது, வேடிக்கையாகவும் அன்ருே இருக்கின்றன!” என்று ஏளனமாய்க் கூறினுன் மங்களபுரிச் செம்மல்.

இதைக் கேட்டுவிட்டு, கஜேந்திரபாகு திரும்பவும் சிம்மக் குரலெடுத்துச் சிரிப்பைக் கக்கினுன். “ஆம் இன்னும் பார்!” என்று சொல்லி, ஏதோ கை அடையாளம் செய்தான்.

அடுத்த சிறுபொழுதில், இளவரசன் விஜயேந்திர னின் கைகளில் விலங்குகள் பூட்டப்பட்டன. அவன் வசமிருந்த நிலவுத்தீவின் அடிமைச் சாசனம் பறிக்கப் பட்டு, பற்றி எரிந்த தீவட்டிக்கு இரையானது.

“எங்கே அந்தப் பெண்?” என்று கஜேந்திரபாகு கேட்டதுதான் தாமதம், அதற்குள் ராஜவல்லி நெருக்க மாகத் தொங்கிய ஆலவிழுது ஒன்றைப் பிடித்துத்தாவி எங்கோ மறைந்து விட்டாள்!

பேயறைந்தாற் போல் நின்ற கஜேந்திரபாகு சுய ஞாபகம் பெற்றதும், “சரி; இவர்களை, காலகண்டன் பாதாளக் குகையில் தனித்தனியே அடைத்து வையுங் கள்!” என்று ஆணையிட்டான்!



# 7 அடிமைப் பத்திரம்!

பாரதி



சொல்கிறான்

'ஐயோ, பரிதாபம்!' என்று அத்தனை பேரும் அனுதாபப்பட்டனர். இளவரசனுக்கு மாத்திரமேதான் பரிந்துகொண்டு பேசினர். பித்தலாட்டக்காரனான மண்ணாசைப்பேயன் கஜேந்திரபாகுவின் நாட்டு வெறியைக் கண்டித்தனர். சீனாக்காரனை அவனுடன் ஒப்பிட்டு ஏசிப் பேசினர்! சாகஸக்காரியான வாசவியைத் தூற்றினர்.

"ஆமாம், ராஜவல்லி தன் சொந்த அத்தானிடம் ஏன் பொய் சொன்னாள், உமா?" என்றாள் சீதா.

"காரணம் இல்லாமல் எந்த ஒரு காரியமும் நடைபெறுவதில்லை! என்று நேற்றுக் கூட நம் வகுப்பில் சொல்லித் தந்தார்கள். சொல்கிறேன், கேள்!" என்று இடையிட்டுப் பேசலானான் பாரதி."

வாசவி கீழ்ப்புறத்திலிருந்த அறையிலும், விஜயேந்திரன் மேற்புறத்திலிருந்த அறையிலுமாக அடைத்து வைக்கப் பட்டனர்.

வாசவிக்கு நடந்த கடமைகளிலே பத்துமடங்கு கூடுதலாகவும், தக்க ராஜமரியாதையுடனும் இளவரசன் விஜயேந்திரனுக்கு நடந்தன.

வாசவி துளியளவுகூட சலனமின்றி இருந்தாள்.

ஆனல், விஜயேந்திரனே பொலிவின்றிக் காணப் பட்டான். இருக்காதா பின்னே! "பீடு பெற நில்!" என்று அடிக்கடி அவன் தந்தை விஜயசிம்மன் மன்னர் அறிவுரை புகட்டியவரல்லவா? இப்பொழுது அவன், வசமாக அல்லவா அகப்பட்டுக்கொண்டு விட்டான்? தன் முறைப் பெண்ணும் எதிர்காலத்தில் மங்களபுரி ராணியுமான ராஜவல்லியின் நடத்தைகள்தாம் அவனுக்கு அதிகமான ஆச்சரியத்தைக் கொடுத்து வந்தன. 'வேண்டுமென்றுதான் அவள் என்னைத் தெரியாது என்று சொல்லியிருக்க வேண்டும். சாகஸமும்தானே போர்முறைத் தந்திரங்களில் முக்கியமான இடம் வகிக்கிறது! ஆம்; அதுவேதான் உண்மை! அவளும் என் போல அகப்படாமல் தப்பித்ததே நல்லது. கெட்டிக்காரி! அரமனைப் பூங்காவில் நாங்கள் சிறு பிராயத்தே விளையாடுகையில் எவ்வளவோ துடிப்புடன் இருப்பாளே இராஜவல்லி! நான்மட்டும் முக்கியமல்ல; நாடும் அவளுக்கு முக்கியமே என்பது அவள் லட்சியம்! அதனல்தான் என்னைத் தெரியாததுபோல வாசவியிடம்

அவள் நடந்து கொண்டிருக்கிருள். பாவம், வாசவி!... என் நெஞ்சிலேயும் நினைவிலேயும் என் ராஜவல்லிக்குத் தவிர வேறு யாருக்குமே இடமில்லை என்பதை அவள் விரைவிலேயே அறிந்து கொள்வாள். இராஜவல்லி இந்நேரம் என் நிலையை அரண்மனையில் சொல்லியிருப் பாளோ? சொல்லியிருக்கா விட்டால்தான் நல்லது! ஏனென்றுல், என் நிலைமை அறிந்து அப்பா வருந்தக் கூடும்!' என்று இப்படிப்பலவாருக எண்ணி எண்ணி ஏங்கிஞன்.

காலகண்டன் குகை, மயானபூமியாக விளங்கியது.

காவலாளிகளின் கால்நடை ஒலியையும் குத்தீட்டி களின் சலங்கைச் சத்தத்தையும் தவிர்த்து, யாதொரு அரவமும் இல்லை.

திடுதிப்பென்று ஏதோ கையொலி கேட்டது.

விஜயேந்திரன் திரும்பிஞன். வாசவி கூப்பிட்ட குரல் கேட்டது.

அப்படியே அப்படியே தொடாமல்கிடந்த உணவுத் தட்டுகளைக் காலால் எற்றிவிட்டு, எழுந்தான்.

"இதோ பாருங்கள், இளவரசே! இந்தச் சுரங்கம் வழியே தப்பிவிடுங்கள். தப்பிச் சென்று கஜேந்திர பாகுவின் நாகரிகமிழந்த அரசியல் சூழ்ச்சிகளைப் பற்றி யும், அவனது அநியாயமான மண் மோகம் பற்றியும் உலக நாடுகளிடமும் உங்களது இணைப்பில் உள்ள

நாடுகளிடமும், சொல்லி இவனை உலக அரங்கத்தில் நிறுத்தி மானத்தை வாங்குங்கள்!" என்றாள் வாசவி.

"பெண்ணினும் பேதை நீ வாசவி! என்னுடைய தனித்த வீரத்தில் எனக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. நான் கோழையாக இங்கிருந்து தப்பு ஒப்பேன்... தமிழச்சாதி எனது பரம்பரை. விடியட்டும் பொழுது. கஜேந்திரபாகுவை அழைத்து வரச்சொல்லி நான் அவனுடன் தனித்து நின்று பொருதப் போகிறேன்! வரட்டும், வரட்டும்!" என்று முப்படையின் வீரச் சங்கம் போல முழங்கினான் இளவரசன்.

அப்போது, ஏதோ ஓர் அவல ஒலி அழுகை ரூபத்தில் வெடித்துப் புறப்பட்டது.

விஜயேந்திரன் நாலு பக்கமும் பார்வையிட்டான்.

காவலாளியைக் கூப்பிட்டுக் கேட்டான்.

"இந்நாட்டின் ராணியின் அழுகை ஐயா அது! இருபத்தைந்து வருஷங்களுக்கு முன், அரண்மனையில் குழந்தையின் — அதாவது இளவரசரின் பிறந்த நாள் விழா கோலாகலமாக நடந்தது. குழந்தைக்குப் பரிசில்கள் கொடுத்து, விழா முடிந்தது. பொழுது விடிந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. அந்தக் குழந்தை இருந்திருந்தால், இந் நேரம் உங்கள் மாதிரி இருந்திருக்கும்!... இளவரசரை இழந்த துயரத்தில் புத்தி பேதலித்துவிட்ட ராணி தாடகாதேவியார், நினைத்துக் கொண்டால் நேரம் காலமின்றி இப்படித்தான்

கதறியழுது எங்கும் சுற்றியலைகிறார்!...'' என்றான் அவன். கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"ஐயோ, பாவம்!'' என்று வருந்தினான் இளவரசன். விதி யாரை விட்டது?

மறுகணம், விஜயேந்திரன் ஏவலாளனைக் கூப்பிட்டு, "ஐயா!... விடிந்ததும், நான் சொல்லும் இத்தகவலைத் தெரிவித்து விடவேண்டும். நான் உங்கள் வேந்தனுடன் போர்செய்ய வேண்டும். உங்கள் நாட்டு அரசியலைப்போல எங்கள் நாட்டில் தனித்து வருபவனைக் கைது செய்ய ஒப்பமாட்டோம் ' என்றும் சொல்லிவிடு! **'ஆட்சிமுறைக்கு உரிய அறத்தில் தவறாமல், தர்மமல்லாதவைகளை நீக்கி, வீரத்திலே குறைபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசன்!'** இந்தத் தத்துவமே எங்களுக்கு ஜீவன் என்றும் அறிவிக்கத் தவறிவிடாதே!... என்று பண்பான குரலில் விளக்கம் கொடுத்து விட்டுப் பெருமூச்சு விட்டான்.

அவ்வாறே செய்யக் கடமைப்பட்டிருப்பதாகச் சொல்லி முடித்துப் பணிவுடன் திரும்பினான் காவற்காரன். அடுத்த நொடியில் அந்தக் காவற்காரன் இடிபோலச் சிரிக்கத் தொடங்கிவிட்டான். 'அத்தான்' என்ற குரல் கனிவுடன் புறப்பட்டது அவனிடமிருந்து.

'ஆ! என்ன இது? பெண்குரலாக — அதிலும், என் ராஜவல்லியின் குரலாகவல்லவா இருக்கிறது!'

என்று ஆர்வத்துடன் உற்றுநோக்கினன் அவ்வுரு வத்தை. அந்தக் கண்களே அவனுக்கு மறுமுறை யும் சாட்சியாயின!

வாசவி நல்ல உறக்கத்தில் கிடந்தாள்.

ஆகவே இப்போது, விஜயேந்திரன் குரலை உயர்த்தத் துணிந்தான். பிறகு, காவலாளியின் உடுப் புக்களுடன் இருந்த ராஜவல்லி ஒரு ஓலையை அவ னிடம் சமர்ப்பித்தாள். அது நிலவுத்தீவு மன்னன் கஜேந்திரபாகுவின் அடிமைச் சாசனம்!

“எப்படித் திரும்பவும் அந்த வெறியனிடம் அடிமைச் சாசனம் எழுதி வாங்கினாய் ராஜவல்லி?” என்று வினவிய பாவனையுடன் வினவினன் விஜ யேந்திர இளவரசன்.

“எல்லாவற்றையும் நீங்களே பொழுது புலர்ந்ததும் புரிந்து கொள்வீர்கள் அத்தான்!... ஆஹா! .” என்று நிறுத்திவிட்டு, விஜயேந்திரனையே பார்த்தாள் அவள். இளமீசையைத் தடவி விட்டுக்கொண்டபோது, விஜ யேந்திரனல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

“என்ன பார்க்கிருய் நீ?”

“உங்கள் நெற்றிக்கண் மச்சத்தைப் பார்க் கிறேன்!...”

“அப்பாவுக்கு இந்த மச்சத்தைப்பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பதில் ஒரு ஆறுதல், ராஜவல்லி!...” என்ருன் அவன்.



இப்பொழுது, முன்பு கேட்ட அந்த ராணி தாடகா தேவியின் அபயக்குரல் எதிரொலித்தது. "மகனே! .. மகனே! .." என்ற கூக்குரலும் கேட்கத் தொடங்கியது.

"உங்களைத் தன் மகன் என்று சொந்தம் பாராட்டப் போகிறது அந்தப் பைத்தியம்!... நீங்கள் போய்த் தூங்குங்கள்! . நான் இனி இங்கு இருக்கக் கூடாது! அந்த அடிமைப் பத்திரத்தைக் கொடுங்கள்! நான் அதை மாமாவிடம் அரண்மனையில் சேர்ப்பித்து விடுகிறேன்!" என்றாள் ராஜவல்லி.

அடிமைப் பத்திரம் ராஜவல்லியிடம் போய்ச் சேர்ந்தது!



# 8 தாயின் திருவிளக்கு!

சட்டநாதன்



சொல்கிறான்

பிரமாதமாக இருக்கிறது கதை! என்று ஒரு முகமாகப் பாராட்டினார்கள் வகுப்பு மாணவர் — மாணவிகள் எல்லோரும்.

காதலின் சக்தியையும் பாசத்தின் பெருமையையும் ரொம்பவும் சிறப்பாகச் சொல்லும் கதை இது என்றும் புகழ்ந்தார்கள்.

“இன்னும் மிகுதியுள்ளதையும், கதையின் முடிவையும் கேட்டால் நீங்கள் அனைவரும் அசந்து போய் விடுவீர்களாக்கும்!’, என்று சொல்லிக் கதையின் இறுதிப் பகுதியைத் தொடரலானான், வகுப்பின் சட்டாம் பிள்ளையான சட்டநாதன்!

பொழுது விடிந்ததோ இல்லையோ, நிலவுத்தீவு அமளிதுமளிப் படலாயிற்று.

மங்களபுரி நாட்டின் இளவரசன் விஜயேந்திரன் கைது செய்யப்பட்ட சேதி கேட்டு மன்னன் விஜய சிம்மன் படை சூழ, படை கொண்டுவந்து விட்டான்.

இச் செய்தியைத் தெரிவிக்க ராஜவல்லி ஆவலுடன் விஜயேந்திரனிடம் வந்தாள். "அத்தான்!" என்று ஆனந்தம் பொங்க விளித்தாள்.

விஜயேந்திரன் திரும்பினான்!

அதே நேரத்திலே, "சகோதரி!" என்று குரல் கொடுத்தாள் ஆடல் அழகி வாசவி.

ராஜவல்லியும் விஜயேந்திரனும் ஒரு சேரத் திரும்பிப் பார்த்தார்கள். மறுகணம் வாசவி நுரை கக்கித் தரையில் சாய்வதை அவர்களால் காண முடிந்தது. "இளவரசே! உங்களை அடையக் கனவுகண்டேன். அந்தப் பாக்கியம் என் சகோதரிக்குக் கிடைத்திருக்கிறது. இளவரசே, என்னை மறந்து விடாதீர்கள்!.. உங்களது நெற்றிக்கண் மச்சம்..! என்று சொல்லிக் கொண்டு வந்தவள், மேற்கொண்டு தொடரமுடியாமல் வாயடைத்துப் போனாள்.

சற்றுப் பொழுதிற்கெல்லாம் ஏதேதோ பயம் நிரம்பிய ஆரவாரம் கேட்டது. அடுத்த அரைக்கால் நாழிகைக்கெல்லாம், "மகனே!" என்று விம்மியபடி அங்கு மங்களபுரி வேந்தன் விஜயசிம்மன் நின்றான்.

இளவரசன் விஜயேந்திரன் விடுதலை பெற்றான்.

நிலவுத்தீவு மன்னனது அரமனைக் கொலு மண்டபத்தில் கைதிக் கோலத்துடன் நின்றான் கஜேந்திரபாகு.

அங்கு தோன்றினான் இளவரசன்.

வேந்தன் விஜயசிம்மன் வெற்றிப் பெருமிதம் பொங்க சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

அப்போது, "வேந்தே! இருபத்தைந்து ஆண்டு காலத்துக்கு முன்னர், என் மகன் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினேனே, நினைவிருக்கிறதா? அந்த விழாவுக்குத் தாங்களும் வந்தீர்கள்! விழா முடிந்து பார்த்தால், குழந்தையைக் காணோம்! என் கடவுளின் நினைவு முகத்தை ஒரே ஒரு தரமேனும் காணக் கொடுத்து வைக்க வேண்டுமென்றுதான் நானும் என் மனைவியும் நித்தமும் எங்கள் குலதேவியைப் பிரார்த்தித்து வருகின்றோம். என் குழவியின் நடு நெற்றியிலிருந்த ஒரு மச்சம் மட்டும் இப்போதும் எனக்குத் துல்லியமாகக் கவனம் இருக்கிறது. உங்கள் அருமந்தப் பிள்ளையின் நெற்றி மச்சத்தையும் அந்தப் பால் முகத்தையும் கண்டதிலிருந்து எனக்கு என் குழந்தையின் நினைவு சதா வந்துகொண்டே இருக்கிறது. அந்த என் சபலத்தில்தான் உங்கள் இளவரசனுடன் நேருக்கு நேர் போரிட்டு இளவரசனைக் கைது செய்யவும் துணிந்தேன். வேந்தே! என் மகனின் ரகசிய வரலாறு ஏதும் தங்கட்குத் தெரிந்திருக்கலாம் என்று நான் ஐயப்படுகிறேன்!..." என்று கஜேந்திரபாகு கூறி முடிப்பதற்

குள்ளாகவே, நிலவுத்தீவின் ராணி தாடகைதேவி வந்தவள், "மகனே!" என்று அலறிப் புடைத்து விஜ யேந்திரனின் பாத கமலங்களிலே சரண் புகுந்தாள். உடனே அவளது மார்பகத்திலிருந்து பாலமுதம் பீறிட்டது. சித்தம் தெளிந்து நின்றாள்!

உணர்ச்சி வசப்பட்ட இளவரசனும் தன்னையும் அறியாதவனாக, "அம்மா" என்று வீறிட்டான்.

இளவரசனை அணைத்தபடி கண்ணீர் பெருக்கினாள் தாடகைதேவியார்.

அப்போது, "அத்தான்! நிலவுத்தீவு மன்னன் பாசவெறி கொண்டவர் என்பது உண்மை. தம் மைந்தனின் உண்மை ரகசியம்' எனக்குத் தெரியும் என்று சொன்னதும், என் இஷ்டப்படி எதுவும் செய்யச் சித்தம் என்றார். உடனே என் விருப்பம்போல, தன் அடிமைப்பத்திரத்தை எழுதிக் கொடுத்துவிட்டார். என் பொய் இப்போது உண்மையாக ஆகிக்கொண்டிருப்பது போலவே தோன்றுகிறதே! .. மாமா! சொல்லுங்கள் உண்மை நடப்பை!..." என்று மன்றாடினாள் மங்கை ராஜவல்லி.

"சொல்லுகிறேன் கேள், மருமகளே! விஜயேந் திரன்தான் நிலவுத்தீவு மன்னன் கஜேந்திரபாகுவின் காணாமற்போன மைந்தன். நடந்த கதை இதுவே. இளவரசனை அவன் அணிந்திருந்த அணிகலன்களுக்கு ஆசைப்பட்டு அரண்மனைப் பணியாளன் கோபிசந்தர் என்பான் குழந்தையைச் சாகடிக்க முற்பட்ட நேரத்தில்



நான் குறுக்கிட்டேன். குழந்தையைக் காத்தேன். பல ஆண்டுகளாகியும் மதலைச் செல்வம் அற்றிருந்த எனக்கு இக்குழந்தை தெய்வமாக வந்தது போலத் தோன்றியது. நெற்றிக்கண் மச்சமும் என்னைக் கவர்ந்தது. இரவே ரகசியமாகத் தூக்கிச் சென்றேன். இந்த ஒரு ரகசியம் அம்பலமாகக் கூடாதே என்றுதான் வளர்த்த பாசம் ஓங்கியது. ஆனல், பொய் என்றுதான் வாழ்ந்தது?... குழந்தைப்பாசமே என்னை இத்தகைய அவலநிலைக்கு இறக்கிவிட்டது!... **'மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும் தாழ்வுக்குக் காரணமான** செயல்களை **ஒரு குன்றிமணி அளவுக்குச் செய்தாலும்கூட, தாழ்ந்து போய்விடுவர்'** என்ற முதுமொழிக்கு நானும் இலக்குத் தான்! .." என்று சொன்னன் மங்களபுரி அரசன் விஜயசிம்மன்; கையிலிருந்த நிலவுத்தீவு மன்னனது அடிமை ஒப்பந்த ஓலையைத் தீக்கு இரையாக்கினன்!

ஆற்ருமைப் பெருமூச்சுடனும் ஆருக வழிந்த விழிநீருடனும் நிலவுத் தீவுமன்னன் கஜேந்திரபாகுவை

நெருங்கி, அவனது கைவிலங்குகளை விடுவித்தான் மங்களபுரி அரசன் விஜயசிம்மன்.

பிறகு, "ஐயா! என் தவற்றை மன்னித்துவிட்டு, என் மைந்தன் அதாவது உங்கள் மைந்தன் விஜயேந்திரனை என்றும் போல எங்களிடமே வாழ விடுங்கள். அப்போதுதான் என் ராணியும் உயிர்தரிப்பாள். இந்த ஒரு வேண்டுதலுக்கு மட்டும் இரங்குங்கள். என் தாய்த் திருநாட்டின் மணிக்கொடியை வேண்டுமானுலும் உங்கள்முன் தாரை வார்த்து விட்டு, நாங்கள் நாடோடிகளாக ஓடிவிடுகிறோம்!..." என்று கெஞ்சி வேண்டினுன் விஜயசிம்மன்.

இதற்குள் இடைமறித்தாள் நிலவுத் தீவு ராணி. "அரசே! அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. இனி மங்களபுரியும் நிலவுத்தீவும் ஒரே கொடியின்கீழ் நேசப்பான்மையுடன் வாழட்டும். நம் இரு ராஜகுடும்பங்களும் ஒரே இடத்தில் வாழ ஏற்பாடு செய்யலாம். அப்போதும் உங்களுக்கும் சரி, எங்களுக்கும் சரி, இளவரசன் விஜயேந்திரனைப் பிரியும் சந்தர்ப்பமே கிட்டாது. **மண்ணில் பிறந்த நாம் மண்ணுக்கு ஆசைப்படுவதில் அர்த்தமே இல்லை!** அன்பை வளர்ப்பதிலும் அன்பை வாழ வைப்பதிலுமேதான் வாழ்க்கையின் பயன் பொதிந்திருக்கிறது!..." என்று கூறினுள் அவள்.

"அம்மா!" என்று ஆர்வத்துடன் அன்னையை அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான் விஜயேந்திரன்.

அப்புறம் என்ன?...

சுபயோக சுபதினத்தில் அழகனான இளவரசன் விஜயேந்திரன் மிகப் பூரிப்புடன் ராஜவல்லியின் கழுத்தில் திருப்பூட்டினான்.

தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறந்தது!...

தாயின் திருவிளக்கு பெருமையுடன் விளங்கியது!...

அவ்வளவுதான்!

கதையும் முடிந்தது; கத்தரிக்காயும் காய்த்தது!...

இதுவரை எங்கள் கதையினைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த உங்கள் எல்லோருக்கும் ஒவ்வொரு மிட்டாய் பரிசளிக்கிறேன்; நம் வகுப்பு ஆசிரியரின் பரிசு இது!... இம்மாதிரி மதிநலம் வளர்க்கும் பண்பாட்டுப் பெருமையை விளக்கும் கதைகளைச் சொல்லி வரும் நம் ஆசிரியருக்கும் நம் அனைவரது சார்பிலும் வணக்கமும் நன்றியும் உரித்தாகுக!...



வணக்கம்!


ஸாகர்